கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,அருப்புக்கோட்டை

அசல் வழக்கு எண்.47/2015

25.07.23.

பெயர் - சுப்பிரமணி

பி.வா.சா.1

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் மீண்டும் குறுக்குவிசாரணை

1. என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.18ல் கண்டுள்ள புகைப்படத்திலுள்ள 1வது புகைப்படத்திலுள்ள ஓட்டுவீடு என்னுடையது என்றால் சரிதான். 2-வது புகைப்படத்திலுள்ள சந்துதான் தாவா சொத்து என்றால் சரிதான். 2ம் புகைப்படத்தில் கண்ட சந்து வழியாகத்தான் மழைநீர் கடக்கும் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.18ல் உள்ள 3-வது புகைப்படம் என்ன என்றால் வாதி அந்த இடத்தில்தான் தனது 3மாடி கட்டிடத்திற்கு பீம் போட்டு தண்ணீர் தொட்டி கட்டி போர்வெல் அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளார்.

2. 2006ல் வழக்கு தாக்கல் செய்து 3 வருட காலத்தில் வாதிகள் வீடு கட்டிவிட்டார்கள் என்றால் சரிதான், அவ்வாறு வழக்கு தாக்கல் செய்தபின்பு வாதிகள் வீடு கட்டியவுடன் அவர்கள் பொது இடத்தை ஆக்கிரமிப்பு செய்ததாக நான் ஏதேனும் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் 2015ல்தான் தண்ணீர்தொட்டி, போர்வெல், பீம் போட்டதால் 2015ல் நான் வழக்கு தாக்கல் செய்தேன். நான் சலவை தொழில் செய்துவருகிறேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.18ல் உள்ள 7-வது புகைப்படத்தில்

கண்டுள்ள புகைப்படம் எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் கிழமேல் சந்தை காண்பிக்கும்வகையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. பி.வா.சா.ஆ.18 ஆவணமானது என்னை சாட்சியாக விசாரித்தபின்பு நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான், அதனை பூமியில் உள்ள நிலையினை காண்பிப்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். புகைப்படத்தில் கண்டுள்ள ஆக்கிரமிப்புகள் யார் செய்துள்ளார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சொல்லமுடியும், அதில் ஜெயராஜ்தான் ஆக்கிரமித்துள்ளார். பி.வா.சா.ஆ.18, 19 ஆவணம் வழக்கிற்கு பின்னிட்ட ஆவணங்கள் என்பதால் அந்த ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.